**செய்தி வெளியீடு எண்28** **நாள்:13.01.2021**

தமிழ் வளர்ச்சித் துறை

## திருவள்ளுவர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சி

திருவள்ளுவர் திருநாளை முன்னிட்டு தைத் திங்கள் 2ஆம் நாளன்று (15.01.2021) காலை 10.00 மணிக்கு சென்னை, காமராசர் சாலை – மெரினா கடற்கரையில் அமைந்துள்ள திருவள்ளுவர் திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் மலர்தூவி போற்றுதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சீர் பெருமக்கள், தமிழறிஞர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைத் தமிழ் வளர்ச்சித் துறை மேற்கொண்டு வருகிறது.

தமிழ் வளர்ச்சி இயக்குநர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**